பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 31 செவ்வாய்க்கிழமை 13.04.2021 கதிர் 27

## 600 ஐத் தாண்டிய கொரோனா காவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 600 ஐத் தாண்டியுள்ளது.

இறுதியாக 4 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மஹரகம பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயதான ஆண் ஒருவரும்,

2

## நான் விடை பெறும் காலம் தூரமில்லை

### மனோவின் உருக்கமான பதிவு



நான் விடை பெறும் காலம் தூரமில்லை என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவரும் ஐக்கிய

2

## பறிபோகுமா ஜீவனின் இராஜாங்க அமைச்சு?



தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், தாய்மாரை இழிவுபடுத்தி ஆற்றிய உரையையடுத்து, கட்சி உறுப்பினர்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார் என்று கொழும்பு ஊடகம்

2

## சுகாதார விதிமுறைகளை மீறினால் மே மாதம் கொரோனா உச்சமடையும்

### இராணுவத் தளபதி எச்சரிக்கை

நாட்டு மக்கள், கொரோனா வைரஸ் தொற்றுத் தடுப்புக்கான சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்படும் பட்சத்தில், எதிர்வரும் மே மாதம் முதல் மிக மோசமான பெறுபேறுகளைச் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.



2

# ஹிட்லராக மாறுவார் கோட்டா!

## இராஜாங்க அமைச்சர் திலும் பகிரங்க அறிவிப்பு



**தேவை ஏற்பட்டால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஹிட்லராக மாறுவார்.**

**- இவ்வாறு போக்குவரத்துத் துறை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.**

**கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

2

## மில்லியன் கணக்கான மரணங்களுக்குப் பொறுப்பான ஹிட்லர் அரசியல்வாதி எவருக்கும் முன்மாதிரி அல்லர்!

### திலும் அமுனுகமவுக்கு ஜேர்மனி தூதுவர் பதிலடி



ஜேர்மனியின் சர்வாதிகார ஆட்சியாளர் 'அடொல்ப் ஹிட்லர் எந்தவொரு அரசியல்வாதிக்கும் முன்மாதிரியானவர் அல்லர்.'

- இவ்வாறு இலங்கைக்கான ஜேர்மனி தூதுவர் ஹோல்கர் செயுபேர்ட் தெரிவித்தார்.

இன்று டுவிட்டர் செய்தியொன்றை வெளியிட்டே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதில் மேலும் உள்ளதாவது:-

'தேவை ஏற்பட்டால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஹிட்லராக மாறுவார்' என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம நேற்று தெரிவித்திருந்தார்.

2

## தலா ரூ.5 ஆயிரம் கொடுப்பனவு யாழில் அறுபது வீதம் விநியோகம்

### 85 ஆயிரம் குடும்பங்கள் பெற்றன

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.13

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வழங்கப்படும் சமூக நலக் கொடுப்பனவு நடவடிக்கையில் ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 178 குடும்பங்களில் இதுவரை 85 ஆயிரம் குடும்பங்களுக்கான - தலா ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு - வழங்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு கொவிட் - 19 நெருக்கடியால் பாதிப்பிற்கு உள்ளான - குறைந்த வருமானம் பெறும் - குடும்பங்களுக்கான சமூக நல கொடுப்பனவு வழங்கும் பணி நேற்று திங்கட்கிழமை காலை முதல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2

## அச்சுவேலி ஆஸ்பத்திரியில் நோயாளிக்குக் கொரோனா

### வைத்தியர், தாதி, ஊழியர் என நால்வர் தனிமைப்படுத்தலில்

அச்சுவேலி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் வைத்தியசாலையின் வைத்தியர், தாதி, ஊழியர்கள் நால்வர் உள்ளிட்ட ஆறு பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று கடந்தவாரம் வீடு திரும்பியிருந்த ஒருவர் மீண்டும் நோய் அறிகுறிகாணப்பட்டநிலையில் இன்று அச்சுவேலி வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக சென்றிருந்தார்.

அவருக்கு கொரோனாத் தொற்று அறிகுறி காணப்பட்டமையை அடுத்து அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்குவர் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

2

## இலங்கையில் இருந்து இந்தியாவுக்குள் இஸ்லாமிய தீவிரவாதிகள் தப்பிஓட்டம்?

### தமிழகப் பொலிஸார் உஷாராம்

கொழும்பு, ஏப். 13

பதினொரு இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளை இலங்கை அரசு தடை செய்திருக்கின்றமையை அடுத்து, அந்தக் குழுக்களைச் சேர்ந்தோர் இலங்கையில் இருந்து தப்பி, இந்தியாவுக்குள் நுழையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றமையால் இலங்கைக்கு அருகில் உள்ள இந்தியாவில் பாதுகாப்பு உஷார்படுத்தப்பட்டிருப்பதாக 'தஹிண்டு' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் கெடுபிடி தீவிரமாவதால் அங்குள்ள இஸ்லாமிய தீவிரவாதிகள் சட்ட விரோதப் படகுப் பயணங்கள் மூலமோ வேறு வழிகளிலோ இந்தியாவுக்குள் தஞ்சம் பெற முயலலாம் என்றும் -

அதை எதிர்பார்த்தே தமிழகப் பொலிஸார் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியிருக்கின்றனர் என்றும் -

இலங்கையின் இஸ்லாமியத் தீவிரவாதிகள் தமிழகத்துக்குள் புகுந்து தஞ்சம் பெற்று அங்கிருந்தபடி இலங்கையில் விடயங்களைக் கையாள முயற்சிப்பர் எனப் பொலிஸார் கருதுகின்றனர் என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறிபோகுமா ஜீவனின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதேநேரம், இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு அரசுக்கு அழுத்தங்கள் கொடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பொகவந்தலாவையில் நிகழ்வொன்றில் கலந்துக் கொண்டிருந்தார்.

இந்த நிகழ்வில் அவர் ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுத்த விடயம் குறித்து பேசும் போது, அரசியல்வாதியொருவர் ஆயிரம் ரூபா விடயத்தில் காட்டிக் கொடுத்ததாகக் கூறியது மட்டுமல்லாது, தாய்மாரையும் மிக மோசமான வார்த்தைகளில் பேசியிருந்தார்.

இது தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்ததுடன், பலரும் கடும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து, அவர் தான் பேசிய வார்த்தை தவறானது என்றும், இனி இவ்வாறான தவறு இடம்பெறாது எனவும் காணொளிப் பதிவினூடாக தெரிவித்தார்.

எனினும், அவர் மன்னிப்பு என்ற வார்த்தையை பயன்படுத்தவில்லை என்பது பெரும் பேசுபொருளாகியது.

இதையடுத்து, கட்சி வட்டாரத்திலுள்ள பலபெண்களும், பெண் உறுப்பினர்களும் அவரது உரையில் பிழையிருப்பதாக கூட்டிக்காட்டியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், கட்சி மட்டத்திலுள்ள பெண்கள் அவருடைய உரை தொடர்பாக பெரும் அதிருப்தியிலுள்ளனர் எனவும் குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு ஆதரவளிக்கும் பல பெண்கள் அமைப்புகளும், அவருடைய உரை குறித்து கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளதுடன், அவருடைய செயற்பாடு குறித்து கவலையடைவதாகவும் தெரிவித்துள்ளதாக அறியமுடிகின்றது.

அதேபோன்று, இந்தியத் தூதரகத்தின் அதிகாரிகளும் ஜீவன் தொண்டமானின் உரைக்கு கவலை தெரிவித்துள்ளதாகவும் கட்சி மட்டத்தில் இவ்வாறான பேச்சுகள் இடம்பெற்றாலும் பொதுவெளியில் இவ்வாறான வார்த்தைப் பிரயோகத்தை பயன்படுத்துவது பொருத்தமற்றது எனத் தெரிவித்துள்ளதாகவும் அறியக் கிடைக்கின்றது.

இதேவேளை, இராஜாங்க அமைச்சராக இருந்து கொண்டு, இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகிப்பது, அரசுக்குப் பெரும் பாதிப்பாக அமையக்கூடும் எனப் பல தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால், ஜீவன் தொண்டமானை இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு அரசிடம் கோரிக்கை விடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், ஜீவன் தொண்டமானின் உரை குறித்து, கட்சி மட்டத்தில் முக்கிய கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன எனவும், இதன்போது பலரும் தங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கவுள்ளனர் எனவும் அறியமுடிகின்றது.

ஜீவன் தொண்டமானின் உரையை அடுத்து, பல தரப்பினரும் தொலைபேசி அழைப்பினூடாகக் கட்சியினருக்குக் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஹிட்லராக மாறுவார் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ஏகாதிபத்திய ஆட்சியை முன்னெடுப்பார் என்று வாக்களித்த 69 இலட்சம் மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், அவர் அவ்வாறு நடந்துகொள்ளாததால் அரசு மீது மக்கள் குறை கூறுகின்றார்கள்.

பௌத்த தேரர்களும் ஜனாதிபதி, ஹிட்லர் போன்று செயற்பட வேண்டும் எனக் கோருகின்றார்கள்.

ஆனால், ஜனாதிபதிக்கு ஒரே தடவையில் ஹிட்லர் ஆக மாறவேண்டி இருப்பதாக நான் நினைக்கவில்லை. எனினும், சில பிரிவினரின் செயற்பாடுகளை அடுத்து அவர் ஹிட்லராக மாறுவதற்கு வாய்ப்பு உள்ளது.

அவ்வாறு ஜனாதிபதி ஹிட்லர் ஆன தன் பின்பு அரசு மீது பழி சுமத்தப்படுவதும் நின்றுவிடும். அத்தோடு அனைத்து செயற்பாடுகளும் சரியாக முன்னெடுக்கப்படும். - என்றார்.

## மில்லியன் கணக்கான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹிட்லர் ஒருவர் இருந்தால் இலங்கையும் பயனடைய முடியும் என்ற விதத்திலான கருத்துக்கள் எனக்குக் கேட்கின்றது.

கற்பனைகளுக்கு அப்பால் மில்லியன் கணக்கான மரணங்களுக்கும் மக்களின் துன்பங்களுக்கும் பொறுப்பானவரே, அடொல்ப் ஹிட்லர் என்பதை நான் நினைவுகூர்கின்றேன்.

நிச்சயமாக அவர் எந்தவொரு அரசியல்வாதிக்கும் முன்மாதிரியானவர் அல்லர் - என்றுள்ளது.

## தலா ரூ.5 ஆயிரம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சமுர்த்தி பயனாளிகள் குடும்பம், குறைந்த வருமானத்தை கொண்ட குடும்பம், முதியோர் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும் குடும்பங்கள், அங்கவீனக் கொடுப்பனவு, சிறுநீரக நோய் காரணமாக கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் குடும்பங்கள் என ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 178 குடும்பங்கள் இக் கொடுப்பனவிற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்றும் இன்றும் இக் கொடுப்பனவின் பெரும் பகுதியை வழங்கவே எதிர்பார்க்கப்பட்டு நேற்றும் இன்றும் 60 வீதத்திற்கும் அதிகமான குடும்பங்களிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இன்று மாலை வரையில் கொடுப்பனவு வழங்கப்படும். நாளை புதுவருடம் விடுமுறை தினம் என்பதனால் வழங்கும் பணிகள் இடம்பெற மாட்டா. இந் நிதியை பெற்றுக்கொள்ளாதவர்கள் நாளை மறுதினம் பெற்றுக்கொள்ள முடியும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## அச்சுவேலி ஆஸ்பத்தி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## சுகாதார விதிமுறை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் கொரோனா வைரஸ் தொற்றுத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாத் தடுப்புச் சட்டங்களை மீறி பொருள் கொள்வனவுகளில் ஈடுபடும் மக்கள் தொடர்பில் நான் கவலையடைகின்றேன்.

மக்கள் இவ்வாறு கட்டுப்பாடின்றி செயற்படும் பட்சத்தில், எதிர்வரும் மே மாதம் முதல் மிக மோசமான பெறுபேறுகளை சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

சித்திரைப் புத்தாண்டு காலப் பகுதியில் கொரோனாத் தடுப்பு தொடர்பான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது செயற்படும் பட்சத்தில், வேறு எந்தவொரு பண்டிகைகளையும் கொண்டாட முடியாது போகும்.

பெருமளவான மக்கள் வழங்கிய ஒத்துழைப்பு காரணமாக நாடளாவிய ரீதியில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த முடிந்தது - என்றார்.

## நான் விடை பெறும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் முகநூலில் உருக்கமான பதிவிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அன்பார்லிமென்டரி லங்வேஜ் (Unparliamentary Language) என்று பொதுவாக சொல்வார்கள். சபையில் பயன்படுத்தக் கூடிய, கூடாத வார்த்தைகள் என்று இருக்கின்றன

ஒருமுறை இன்று அமைச்சராக இருக்கும் ஒரு இடதுசாரி எம்.பி, பிரதமர் ரணிலை மிக மோசமான சிங்கள கெட்ட வார்த்தையில் சபையில் திட்டினார்.

பதிலுக்கு ரணில் தூஷணம் பயன்படுத்தவில்லை. தூஷணம் பேசிய எம்.பியைப் பார்த்து, காய்ந்த பூசணிக்காய் என கிண்டலாகச் சொன்னார்.

ரணிலிடம் நம்பமுடியாத நகைச்சுவை உணர்வு இருக்கின்றது. என்னிடம் அது எக்கச்சக்கமாக கொட்டிக்கிடக்கின்றது.

தூணம் என்பது மட்டுமல்ல, எல்லை மீறிய வார்த்தைப் பிரயோகங்களும், அன்பார்லிமென்டரிதான்.

சமீபத்தில், கொழும்பில் கொரோனா வினால் மூடப்பட்டிருந்த பிரதேச குடும்பங்களுக்கு, ஒரு வாரத்துக்கு 5000/= ரூபா வழங்க வேண்டும் என நான் வாதிட்ட போது, இன்றைய அமைச்சர் ஒருவர் என்னை மடையா (மோடயா) என்று திரும்ப, திரும்பத் திட்டினார்.

நான் பதற்றப்படாமல், நான் கூறியதை மாத்திரம் திரும்ப, திரும்ப கூறினேன்.

கடைசியில் மக்களுக்கு அந்த ரூ. 5000/= பெருவாரியாக கொழும்பில் கிடைத்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில் சபையில் இருந்த எனது நண்பர்கள் என்னையும், அந்த அமைச்சரை நோக்கிக் கடுமையான வார்த்தைப் பிரயோகம் செய்யும்படி சொன்னார்கள்.

நான் அப்படி முறை தவறி வார்த்தைகளைப் பயன்படுத்த மறுத்து விட்டேன்.

சபையில் மட்டுமல்ல, பொதுவாக நான் கண்ணியக்குறைவான வார்த்தைகளை எங்கேயும், சொல்லாலும், எழுத்தாலும் பயன்படுத்துவதில்லை.

பல நூற்றுக்கணக்கான தமிழ், சிங்கள, ஆங்கில நேரலை ஊடக நிகழ்வுகளில் நான் பங்குபற்றியுள்ளேன். அங்கே வாதிடும்போது அடிக்கடி உணர்ச்சிவசப்படுவேன். அதுதான் நிகழ்ச்சியை உயிரூட்டமாக ஆக்கும். ஆனால், வரம்பு மீறிய வார்த்தைகளை எந்த மொழியிலும் நான் பேசியதில்லை.

உண்மையைச் சொல்லப் போனால் எனக்குத் தூஷணம் மற்றும் முறை தவறான தமிழ் வார்த்தைகள் தெரியாது. ஆகவே, தனிப்பட்ட உரையாடலிலும்கூட என்னிடமிருந்து தூஷணம் வராது.

நான் என்னை இழந்தது ஒருமுறை தான். அது ஒரு தனியார் ஊடக நிகழ்வில் நடந்தது.

அதுவும், என்னைப்பற்றி என்ன கூறப்பட்டிருந்தாலும் நான் சிரித்துக்கொண்டே ரணிலைப் போன்று நகைச்சுவையாக ஏதாவது பதில் கூறியிருப்பேன்.

அன்று, அந்த ஒரு அரசியல்வாதி நிதானம் இழந்து, எமது சமூகத்தைத் தரந்தாழ்த்தி பேசிய போது, பலமுறை அந்த சொல்லாடலை வாபஸ் வாங்க சொல்லியும் கேட்காததால், அவரை குளிரவைத்து அமைதியாக்கினேன். ஆனால், அதுவும்கூட என் மனதை அவ்வப்போது உறுத்தும். தற்போது நாடாளுமன்றத்தில் இருக்கும், அவரை நோக்கி நட்புடன் எப்போதும் நான் இதற்காகவே புன்முறுவல் புரிகின்றேன். நான் விடை பெறும் காலம் தூரமில்லை. எனக்குப் பின்னாலே வரும் இளையோர் எம்மைப் பார்த்து படிக்க ஏதாவது இருக்க வேண்டுமே...! - என்றுள்ளது.

## 600 ஐத் தாண்டிய ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்குரஸ்ஸை பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதான பெண் ஒருவரும், நாரஹேன்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதான பெண் ஒருவரும், காலி பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதான ஆண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி, இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 602 ஆக அதிகரித்துள்ளது என அரச திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மஞ்சள் கன்று விற்பனைக்கு**

1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.

தொடர்புகளுக்கு 021 492 7778

**இஞ்சி கன்று விற்பனைக்கு**

தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு 021 492 7778

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@
gmail.com
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உண்மையை உரையுங்கள்!

அதிகாரத்தைப் பகிர்தல், சமஷ்டி முறையை வழங்குதல், மாகாண சபைத் தேர்தலை நடத்துதல் போன்றவற்றை யார் பேசினாலும் அதனைப் பிரிவினை வாதம், பிரவினைக்கான முதல்படிஎன்றுநியாயமின்றிகூப்பாடுபோடுகின்றதுதென்னிலங்கை பௌத்த – சிங்களப் பேரினவாதம்.

அந்தத் தவறான கற்பிதத்திலிருந்து தென்னிலங்கைப் பேரினவாதத்தை விடுவிப்பதாயின், தமிழர் தரப்பின் இன்றைய உண்மையான நிலைப்பாட்டை சொல்லிலும் செயலிலும் வெளிப்படையாக நாம் காட்டுவது முக்கியம். பேச்சுத் திறமாகவும், செயற்பாடு கரவாகவும் அமையுமானால் நியாயமும் எங்கள் பக்கம் நிற்காது. சர்வதேசம் கூட எங்கள் பக்கபலமாக நிலையெடுக்காது. நம் அரசியல் தலைவர்கள் மிகக் கவனம் எடுக்க வேண்டிய விடயம் இது.

தமது குறுகிய அரசியல் லாபங்களுக்காக இனத்தையே சிக்கலில் மாட்டும் கீழ்த்தரமான அணுகுமுறைகளை அவர்கள் நாடக் கூடாது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு சில அதிகார வரம்புகள் இருக்கின்றன. எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாது என்பதற்கு சில வரன்முறைகள் இருக்கின்றன. உள்ளூராட்சி மன்றங்களை வைத்துக் கொண்டே நாம் ‘காவல் படை’ அமைப்போம் என்றால், இவர்களிடம் மாகாண சபையைக் கொடுத்தால் என்னவாகும் என்று தென்னிலங்கைப் பேரினவாதம் பிரசாரம் செய்ய இடமளிப்பது நமது முட்டாள்தனமான அரசியல்.

ஏதோ சில அரசியல் பிரகிருதிகள் தங்களின் சுயலாப அரசியல் ஆதாயத்துக்காக செய்யும் திருகுதாளங்களைப் புரிந்தும், புரியாமலும் அதற்குப் பின்னால் அணி வகுப்பது ஆபத்தானது. அதுவும் சட்ட விடயங்கள், வியாக்கியானங்கள் புரிந்த மேதைகள் கூட இத்தகைய சின்னத்தனமான அரசியல் சித்து விளையாட்டுகளுக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் மோசமான தவறுகளை வெளிப்படுத்தாமல் அரசியல் அணி சேர்வுக்காக மௌனம் பேணி, சமாளிப்பது அவர்களின் தரத்துக்கும் மக்கள் எதிர்பார்ப்புக்கும் பொருத்தமேயற்றது என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறோம்.

உள்ளூராட்சி சட்டங்கள், உப விதிகளின்படி கட்டணங்கள், வாடகை போன்றவற்றை அறவிடவும், ஆள் வைத்து வசூலிக்கவும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு சட்ட அனுமதியுண்டு. குற்றத்தைத் தீர்மானிக்கவோ தண்டப் பணம் அறவிடவோ அல்ல.

காவல் படையை உருவாக்கி, இழைக்கப்பட்ட தவறு அல்லது குற்றம் குறித்துத் தீர்மானித்துத் தண்டனப் பணம் அறவிடுவதாகக் கூறுவது சட்ட ரீதியான ஒழுங்கு முறையேயல்ல.

குப்பை கொட்டுவதற்கும், துப்புவதற்கும் தண்டம் அறவிடப்படும் எனத் தெரிவித்துத் தொகையை யாழ். மாநகர சபை வர்த்தமானியில் அறிவித்து விட்டால் அந்தக் குற்றம் குறித்துத் தீர்மானிக்கும் அதிகாரம் நேரடியாக மாநகர சபைக்கு வந்து விடும் என்பதல்ல.

வீதிப் போக்குவரத்தை மீறியமைக்காகத் தண்டம் அறவிடும் முறையைத் தீர்மானிக்க போக்குவரத்துப் பொலிஸாருக்கு சட்ட வரையறையுடன் கூடிய அதிகாரங்கள் உண்டு.

ஆனால் சுகாதார விதிமுறை மீறலுக்காக சுகாதாரப் பரிசோதகர்களால் தண்டம் விதிக்க முடியாது. விடயத்தை நீதிமன்றுக்குக் கொண்டு போய் நீதிமன்றம் மூலம்தான் குற்றம் தீர்மானிக்கப்பட்டு, தண்டமோ, தண்டனையோ விதிக்கலாம்.

அப்படி இருக்கையில், யாழ் மாநகரசபை மேயர் யாரோ சிலருக்கு சீருடையை வழங்கி விட்டு, அவர்கள் மூலம் குற்றங்களுக்குத் தண்டம் அறவிடுவது என்பது சட்ட சாத்தியமேயற்றது.

குறைந்தபட்சம் தவறிழைத்தவர்களை நீதிமன்றுக்கு அழைத்துச் சென்று முறையிடும் சட்ட அதிகாரமாவது அந்தச் சீருடையினருக்கு சட்ட ரீதியாக வழங்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி ஏதும் வழங்கப்படவேயில்லை. அப்படியிருக்கையில் ‘காவல் படை’ என்றும், ‘தண்டம் அறவீடு’ என்று மாய்மாலன் காட்டுவது குறுகிய அரசியல் சுத்துமாத்தின்றி வேறில்லை.

கொழும்பிலும் மாநகர சபையின் கீழ் போக்குவரத்து ஊழியர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்குப் பெயர் Traffic Warden (போக்குவரத்து வார்டன்). சட்டத்தில் வரையறுக்கப்பட்ட கட்டணங்களை அறவிடுவது மட்டுமே அவர்கள் வேலை. தண்டம் வசூலிப்பது அல்ல.

யாழ் மாநகர சபையைப் பொறுத்தவரை கூட போக்குவரத்துத் தரப்புக் கட்டணங்களை அறவிடும் ஊழியர்கள் முன்னர், கடந்த மிலேனியத்தின் கடைசி தசாப்த காலத்தை ஒட்டி பணியில் இருந்திருக்கின்றார்கள். ஆனால் சீருடையின்றி. அவ்வளவுதான் வேறுபாடு.

யாழ்ப்பாண மேயர் மணிவண்ணனும் அவரைச் சூழ்ந்த சிலரும் அவசரப் புத்தித்தனமாக – தீர்க்கதரிசனமில்லாமல் – குறுகிய அரசியல் லாப இலக்கோடு – கொளுத்திப் போட்ட அரசியல் வெடியே இது.

அவருக்காக வாதாடுவதும், நீதிமன்றத்தில் கிளர்ந்தெழுவதும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் போன்றோரின் தொழில்சார் கடமையாக இருக்கலாம்.

ஆனால், அதனையும் தாண்டி, மேயரின் சின்னப்பிள்ளைத்தனமான இந்த அரசியல் கேலிக் கூத்துக் குறித்து, நீதிமன்றுக்கு வெளியில் அதன் சட்ட வலிமை, நியாயம், யதார்த்தம் குறித்து தமிழ் மக்களுக்கு உண்மையை – நியாயத்தை – சட்ட விதிகளின் மறைப்புக்கு பின்னால் நிற்காமல், வெளிப்படையாக எடுத்துரைக்கும் கடப்பாடும் அவர்களுக்கு உண்டு. அரசியல் அணிச் சேர்க்கை பார்க்காமல் மக்களுக்கு அவர்கள் உண்மையை உரைக்க முன்வர வேண்டும்.

# ஐந்தாயிரம் ரூபா கொடுப்பனவு; அரசின் பொறிமுறைகள் தவறு!

## அநுர குமார தெரிவிப்பு



குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு ஐந்தாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்த முடிவுக்கு மக்கள் விடுதலை முன்னணி பாராட்டு தெரிவித்துள்ளது.

இருப்பினும் அதனை வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்த பொறிமுறை தவறானது என அந்தக் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த முடிவு புத்தாண்டு வருவதற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது என்றும் இது அரசாங்கத்தின் இயலாமையைக் காட்டுகிறது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

ஆயிரம் ரூபாவுக்கு அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளல் உட்பட பல்வேறு தோல்வியுற்ற முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் 5 ஆயிரம் கொடுப்பனவு வழங்குவதற்கான முடிவு எட்டப்பட்ட நேரத்தில், அரசாங்க விடுமுறை அறிவிக்கப்பட்டது என்றும் நாடு, பொருளாதாரம் அல்லது மக்கள் மீதான அக்கறை தொடர்பாக அதிகாரிகளுக்கு புரிதல் இல்லை என்பதை இந்த முடிவு காட்டுகிறது என்றும் அநுரகுமார திஸாநாயக்க கூறினார்.

# 17 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்கள் மற்றும் காலி, மாத்தறை, அநுராதபுரம் உள்ளிட்ட 17 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதிகளில் கடுமையான மின்னல், இடி தாக்கம் தொடர்பில் சிவப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் –

இந்தப் பகுதிகளில் கடும் மழைவீழ்ச்சியை எதிர்பார்க்கலாம். இடியுடன் கூடிய மழைக்காலங்களில் தற்காலிகமாகப் பலத்த காற்று வீசக்கூடும்.

அதன்படி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அநுராதபுரம், புத்தளம், குருநாகல், கம்பஹா, கேகாலை, கண்டி, நுவரெலியா, கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தளை உள்ளிட்ட 17 மாவட்டங்களில் காற்று வீசும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழைக்காலங்களில் நெல் வயல்கள், தேயிலைத் தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்த நீர் நிலைகள் போன்ற திறந்த பகுதிகளை தவிர்க்குமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

# புற்றுநோயை ஏற்படுத்தும் தேங்காய் எண்ணெய் மாதிரி ஆய்வுமுடிவு புத்தாண்டுக்குப் பின் வரும்

புற்றுநோயை ஏற்படுத்தும் தேங்காய் எண்ணெய் மாதிரிகளின் ஆய்வு முடிவுகள் புத்தாண்டுக்கு பின்னர் வெளியிடப்படும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்ட 30 தேங்காய் எண்ணெய் மாதிரிகளின் முடிவுகளே இவ்வாறு வெளியிடப்படவுள்ளன என அந்த அதிகார சபையின் உயர் அதிகாரி ஊடகமொன்றுக்குக் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், சந்தைகளில் பெறப்பட்ட 109 தேங்காய் எண்ணெய் மாதிரிகளில் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய எப்லடொக்ஸின் இரசாயனம் அடங்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் அண்மையில் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மரக்கறிகளின் விலைகள் வவுனியாவில் அதிகரிப்பு

தமிழ் – சிங்களப் புத்தாண்டு நாளை கொண்டாடப்படவுள்ள நிலையில் வவுனியாவில் மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

புத்தாண்டை முன்னிட்டு மக்கள் ஆலய தரிசனம் மேற்கொண்டு மரக்கறி உணவுகளை அதிகம் சமைத்து உண்டு விருந்தோம்பல் செய்வது வழக்கம்.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி வவுனியாவில் மரக்கறி விற்பனையாளர்கள் மரக்கறிகளின் விலையைச் சடுதியாக உயர்த்தி விற்பனை செய்து வருகின்றனர் எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நேற்று 120 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட தக்காளிப்பழம் 240 ரூபாவுக்கும், 160 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட கத்தரிக்காய் 300 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக மக்கள் தெரிவித்தனர்.

இதேபோல் அனைத்து மரக்கறிகளின் விலைகளும் ஒரேநாளில் சடுதியாக அதிகரித்துள்ளன எனப் பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

# இலங்கையில் மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள குள்ள மனிதன்!

கடந்த காலங்களில் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் பரபரப்பை ஏற்படுத்திய குள்ள மனிதர்கள் தொடர்பில் மீண்டும் செய்தி வெளிவர ஆரம்பித்துள்ளது.

பதுளை, இரண்டாம் கட்டை, நெத்ராகம பிரதேசத்தில் உள்ள கிராமத்திலேயே மீண்டும் குள்ள மனிதர்களின் நடமாட்டம் ஆரம்பித்துள்ளது.

மாத்தறை, தெட்டமுன மீனவ கிராமத்தில் இதற்கு முன்னர் குள்ள மனிதர்கள் தொடர்பில் தகவல் வெளியாகியது.

அத்துடன் குளியாப்பிட்டிய, எலதலவ மற்றும் முனமுல்தெனிய ஆகிய பிரதேசங்களிலும், அநுராதபுரம் – மஹவிலச்சிய, எந்தகல்ல ஆகிய பிரதேசங்களிலும் அம்பாறை – தமன – தொட்டம பிரதேசங்களிலும் இதற்கு முன்னர் குள்ள மனிதர்கள் தொடர்பில் தகவல் வெளியாகியது.

அவ்வாறான சூழலில் பதுளை – இரண்டாம் கட்டை – நெத்ராகம பிரதேசத்தில் குள்ள மனிதர்கள் இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதன் காரணமாகத் தாங்கள் அச்சத்தில் இருப்பதாகப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதேசங்களில் தோன்றும் குள்ள மனிதர்கள் பெண்களைத் துரத்துகின்றனர் எனவும் அச்சுறுத்துவதாகவும் பல தகவல்கள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மம்தா பானர்ஜிக்கு பிரசாரத் தடை!

## மேற்கு வங்கத் தேர்தல் களத்தில் பரபரப்பு

மேற்கு வங்கத்தில் மொத்தமுள்ள 294 சட்டசபைத் தொகுதிகளுக்கு 8 கட்டங்களாக தேர்தல் நடைபெற்று வருகிறது. அங்கு 4 கட்ட வாக்குப்பதிவுகள் முடிந்துள்ளன. இதில் கடந்த 10 ஆந் திகதி நடந்த 4 ஆவது கட்ட வாக்குப்பதிவில் வன்முறைச் சம்பவங்களும் அரங்கேறின.

கூச்பெஹார் மாவட்டத்தின் சிட்டால்குச்சியில் வாக்குச்சாவடி ஒன்றில் மத்தியப்படைகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் உயிரிழந்தனர். பாதுகாப்புப் படையினரை முற்றுகையிட்டு அவர்களது துப்பாக்கிகளைப் பறிக்க முயன்றதால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக பாதுகாப்புக் கடமையிலிருந்தவர்கள் தெரிவித்தனர்.

சிட்டால்குச்சியில் மற்றொரு வாக்குச்சாவடியில் பா.ஜ.க. தொண்டர் ஒருவர் கொல்லப்பட்டார். அவரை திரிணாமுல் காங்கிரஸார்தான் கொன்றார்கள் என பா.ஜ.கவினர் குற்றம் சாட்டுகின்றனர். பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டுக்கும் கூட மாநில முதல்வர் மம்தா பானர்ஜியின் ஆத்திரமூட்டும் வார்த்தைகளே காரணம் என உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறியுள்ளார்.

இந்த நிலையில், தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய முதலமைச்சர் மம்தா பானர்ஜி, மத மோதலை



தூண்டும் சர்ச்சைக்குரிய வகையில் பேசியதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இது தொடர்பாக மத்திய அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி தேர்தல் கமினில் புகார் அளித்துள்ளார்.

இதைத்தொடர்ந்து, மத்திய பாதுகாப்புப் படைகளுக்கு எதிரான மம்தாவின் கருத்துகள் மற்றும் இந்த வகுப்புவாத கருத்துகளுக்காக மம்தா பானர்ஜிக்கு ஒருநாள் பிரசாரம் செய்ய தேர்தல் கமிஷன் நேற்று தடை விதித்துள்ளது. இந்தத் தடை நேற்று இரவு 8 மணி முதல் இன்று இரவு 8 மணி வரை அமுலில் இருக்கும் என தேர்தல் கமிஷன் அறிவித்து உள்ளது.

மம்தாவின் இந்த கருத்துகள் மாநிலத்தில் தீவிரமான சட்டம் – ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்தும் எனக்கூறி கடும் கண்டனம் தெரிவித்துள்ள தேர்தல் கமிஷன், தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருக்கும் நாள்களில் பொதுவெளியில் பேசும்போது இதுபோன்ற கருத்துகளை தவிர்க்குமாறும் அறிவுறுத்தியுள்ளது.

மேற்கு வங்க தேர்தலில் முதலமைச்சர் மம்தா பானர்ஜிக்கே பிரசாரம் செய்ய ஒருநாள் தடை விதித்திருக்கும் நடவடிக்கை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. தேர்தல் கமிஷனின் இந்தத் தடையைக் கண்டித்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளார் என மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் தளத்தில், 'தேர்தல் கமிஷனின் ஜனநாயக விரோத மற்றும் அர சியல் சாசனத்துக்கு எதிரான முடிவை எதிர்த்து கொல்கத்தா காந்தி மூர்த்தியில் நான் போராட்டத்தில் ஈடுபடுகி றேன்' என்று கூறியுள்ளார்.

தேர்தல் கமிஷனின் இந்த நடவடிக்கைக்கு திரிணாமுல் காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்து இருந்தது. தேர்தல் கமிஷன், பா.ஜ.கவின் ஒரு பிரிவாக செயல்படுவதாகவும் இந்தத் தடை சர்வாதிகாரத்தின் வெளிப்பாடு எனவும் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான குணால் கோஷ் கூறியுள்ளார்.

## கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்; பிரதமர் மோடிக்கு சோனியா காந்தி கடிதம்

இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலை தீவிரமாக பரவத் தொடங்கியுள்ளது. நாடு முழுவதும் 12 லட்சம் பேர் கொரோனாவிற்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனாப் பாதிப்பு குறித்து காங்கிரஸ் கட்சித்தலைவர் சோனியாகாந்தி அக்கட்சி ஆளுகின்ற மாநிலங்களின் முதல்வர்கள் மற்றும் அமைச்சர்களுடன் காணொளிக் காட்சி வாயிலாக அண்மையில் ஆலோசனை நடத்தினார். இதைத் தொடர்ந்து, பிரதமர் மோடிக்கு அவர் நேற்று கடிதம் ஒன்று எழுதியுள்ளார்.



அந்தக் கடிதத்தில், 'கொரோனாப் பரவல் அதிகரித்து வரும் நிலையில் மீண்டும் ஊரடங்கு மற்றும் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக பலர் வேலை இழந்துள்ளனர். ஆகவே ஊரடங்கால் பாதிக்கப்படும் பொருளாதாரத்தில் நலிவடைந்தவர்களுக்கு மாதந்தோறும் 6000 ரூபா உதவித் தொகை வழங்க வேண்டும். புலம்பெயர் தொழிலாளர்களின் நலன் கருதி செயல்பட வேண்டும்.

கொரோனாத் தடுப்பூசி செலுத்துவதில் வயது வரம்பை நீக்க வேண்டும். விருப்பப்படும் அனைவருக்கும் அவரவர் விருப்பத்தின் பேரில் கொரோனா தடுப்பூசி செலுத்திட அனுமதிக்க வேண்டும். புலம்பெயர்ந்தவர்கள் சொந்த மாநிலங்களுக்கு திரும்பிச் செல்ல தடையற்ற போக்குவரத்து கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மருந்துகளுக்கும் மருத்துவ உபகரணங்களுக்கும் ஜி.எஸ்.டி. வரியை ரத்து செய்ய வேண்டும். கொரோனா தடுப்பு மருந்துக்கான தேவை அதிகரித்துள்ள நிலையில், பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே, இதனை சரிசெய்ய உற்பத்தியை அதிகரிப்பதோடு, புதிய தடுப்பு மருந்துகளுக்கான அனுமதியை தாமதமின்றி வழங்க வேண்டும்' என அந்தக் கடிதத்தில் சோனியா காந்தி வலியுறுத்தியுள்ளார்.

## இந்தியாவில் அவசர பயன்பாட்டுக்காக ரஷ்யாவின் 'ஸ்புட்னிக் வி' தடுப்பூசிக்கு அனுமதி

கொரோனாவைக் கட்டுப்படுத்த பல்வேறு நாடுகள் தடுப்பூசிகளைத் தயாரித்துள்ளன. இந்தியாவும் கொவெக்சின் என்ற தடுப்பூசியை உருவாக் கியது. பாரத் பயோடெக் நிறுவனம் இந்தத் தடுப் பூசியைத் தயாரித்தது. இதைத்தவிர ஒக்ஸ்போர்ட் மற்றும் அஸ்ட்ராஜெனெகா நிறுவனங்கள் கண்டுபிடித்த தடுப்பூசியை கொவிஷீல்ட் என்ற பெயரில் புனேயில் உள்ள சீரம் நிறுவனம் தயாரித்து வருகிறது.

இந்த இரண்டு தடுப்பூசிகளுக்கும் இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி ஒப்புதல் அளித்துள்ளார். அதைத்தொடர்ந்து கடந்த ஜனவரி 16 ஆம் திகதி முதல் இந்த இரு தடுப்பூசிகளும் நாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கொரோனாவுக்கு எதிராக 'ஸ்புட்னிக் வி' என்ற தடுப்பூசியை ரஷ்யாவும் தயாரித்துள்ளது. உலக அளவில் கொரோனாவுக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட முதல் தடுப்பூசியாக இது உள்ளது. இந்தத் தடுப்பூசியின் 3 ஆவது கட்ட மருத்துவப் பரிசோதனையில் இது 91.6 சதவீத செயல்திறன் உள்ளது என்பதும் தெளிவாகியது. இந்தத் தடுப்பூசிக்குப் பல்வேறு நாடுகள் ஒப்புதல் அளித்து தங்கள் நாடுகளில் பயன்படுத்தி வருகின்றன.

இந்தத் தடுப்பூசியை இந்தியாவில் பரிசோதிப்பதற்கும், தயாரித்து விநியோகிப்பதற்கும் டாக்டர் ரெட்டி ஆய்வகம், ரஷ்யாவின் நேரடி முதலீட்டு நிதியத்திலிருந்து உரிமத்தைப் பெற்றிருக்கிறது. இந்தத் தடுப்பூசிக்கு அனுமதி கேட்டு மத்திய மருந்துத் தரக் கட்டுப்பாட்டு அமைப்பிடம் டாக்டர் ரெட்டி ஆய்வகம் விண்ணப்பித்தது. இதை தரக்கட்டுப்பாட்டு அமைப்பின் சிறப்பு நிபுணர் குழு பரிசீலித்தது, 'ஸ்புட்னிக் வி' தடுப்பூசியை இந்தியாவில் குறிப்பிட்ட சூழல்களில் அவசர தேவைகளுக்குப் பயன்படுத்த அந்தக் குழு ஒப்புதல் அளித்திருக்கிறது.

இந்த ஒப்புதல் இனி இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பப்பட்டு, அவர் இது குறித்து இறுதி முடிவு எடுத்து ஒப்புதல் அளித்தால், இந்தியாவில் அவசர தேவைகளுக்காக ரஷ்யாவிலிருந்து இந்தத் தடுப்பூசி இறக்குமதி செய்யப்படும்.

இந்தியாவில் தற்போது கொரோனாவின் இரண்டாவது அலை வேகமாகப் பரவி வருகிறது. இதனால் தடுப்பூசி போடும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இதில் பல மாநிலங்களில் தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு இருப்பதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. இந்தச் சூழலில் 'ஸ்புட்னிக் வி' தடுப்பூசிக்கு ஒப்புதல் கிடைத்திருப்பது இந்திய தடுப்பூசி பணிகளுக்கு மேலும் உந்துசக்தியாக அமையும் என மருத்துவ நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## தலைமை தேர்தல் கமிஷனராக சுசில் சந்திரா நியமனம்



இந்தியத் தலைமைத் தேர்தல் கமிஷனராக பதவி வகித்து வந்த சுனில் அரோரா நேற்று ஓய்வு பெற்றார். அவரது பணிக்காலத்தில் அசாம், தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. மேற்கு வங்க சட்டசபைத் தேர்தலில் 4 கட்ட வாக்குப்பதிவு நிறைவடைந்துள்ளது.

இந்தநிலையில், புதிய தலைமைத் தேர்தல் கமிஷனராக தேர்தல் அதிகாரி சுசில் சந்திரா இன்று நியமிக்கப்பட்டார். இந்தக் கவலை மத்திய சட்ட அமைச்சகம் வெளியிட்டுள்ளது. சுசில் சந்திரா, கடந்த 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதியிலிருந்து தேர்தல் அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்.

தலைமை தேர்தல் கமிஷனராக அவர் இன்று பதவி ஏற்கிறார். அவரது பதவிக்காலம் அடுத்த ஆண்டு மே 14 ஆம் திகதி நிறைவடையும். அவரது தலைமையில் கோவா, மணிப்பூர், உத்தரகாண்ட், பஞ்சாப், உத்தரப்பிரதேசம் ஆகிய 5 மாநிலங்களுக்கு அடுத்த ஆண்டு சட்டசபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.



## கும்பமேளாவில் பங்கேற்ற 102 பேருக்குக் கொரோனா

ஹரித்துவாரில் 28 லட்சம் பேர் பங்கேற்ற கும்பமேளாவில் 102 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

12 நாள்களாக நடைபெற்ற கும்பமேளாவில் 18,169 பேருக்கு கொரோனா பரிசோதனை நடத்தப்பட்டது. பரிசோதனை முடிவில் கொரோனாத் தொற்று உறுதியான 102 பேரும் தனிமைப்படுத்தப்பட்டு தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## கொரோனா தடுப்பு நடவழக்கைகள் குறித்து மாநில ஆளுநர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை

நாடு முழுவதும் கொரோனாப் பரவல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நேற்றுக் காலை 8 மணி வரையிலான முந்தைய 24 மணி நேரத்தில் மிகவும் அதிகமாக 1.68 லட்சத்துக்கும் அதிகமானோர் தொற்றுக்கு ஆளாகியிருக்கின்றனர்.

இந்தியாவில் புதிய பாதிப்புகள் தினந்தோறும் உச்சம் பெற்றுவரும் நிலையில் கொரோனாவைத் தடுப்பதற்கான வழிமுறைகளை மத்திய – மாநில அரசுகள் முடுக்கி விட்டுள்ளன. அதேநேரம் தடுப்பூசி செலுத்தும் பணிகளையும் வேகப்படுத்தி வருகின்றன.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து கடந்த 5 ஆம் திகதி பல்வேறு துறைகளைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகளுடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார். அதன் தொடர்ச்சியாக மாநில முதலமைச்சர்களுடன் 8 ஆம் திகதி கலந்துரையாடினார்.

அப்போது மாநிலங்களின் கொரோனா நிலவரம், எடுக்கப்படும் தடுப்பு நடவடிக்கைள் மற்றும் தடுப்பூசித் திட்டப்பணிகள் குறித்து அவர் கேட்டறிந்தார். அத்துடன் தொற்றை வீரியமாக தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

அடுத்ததாக மாநில ஆளுநர்களுடன் ஆலோசனை நடத்தத் திட்டமிடப்பட்டு இருப்பதாக தகவல் வெளியாகியுள்



ளது. துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடுவும் பிரதமர் மோடியும் இணைந்து நாளை மாநில ஆளுநர்களுடன் இந்த ஆலோசனைக் கூட்டத்தை நடத்தவிருப்பதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மெய்நிகர் முறையில் நடத்தப்படும் இந்தக் கூட்டத்தில், நாடு முழுவதும் கொரோனாவைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்படும் என தெரிகிறது. குறிப்பாக, மக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்க மத்திய அரசு திட்டமிட்டு வருவதாகக் கூறப்படும் நிலையில், இந்தக் கூட்டத்தில் அவை குறித்து ஆலோசனை நடத்தப்படும் எனவும் டெல்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 74 ஆவது பாப்டா விருதுகள் சிறந்த படமாக நோமட்லேண்ட்



சர்வதேச அளவில் ஆஸ்கருக்கு அடுத்தபடியாக கௌரமிக்க விருதாக கருதப்படுவது பிரிட்டிஷ் அக்கடமியின் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி விருதுகள் (பாப்டா) ஆகும்.

இந்த நிலையில் 74 ஆவது பாப்டா விருதுகள் வழங்கும் விழா லண்டனில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.

இதில் 'நோமட்லேண்ட்' என்கிற அமெரிக்க படம் சிறந்த படமாக தேர்வு செய்யப்பட்டது. இந்த படத்தில் கதையின் நாயகியாக நடித்த 63 வயதான பிரான்சிஸ் மெக்டார்மண்டுக்கு சிறந்த நடிகைக்கான விருது வழங்கப்பட்டது.

அதேபோல் 'நோமட்லேண்ட்' படத்தை இயக்கிய பெண் இயக்குநர் கோலே ஜாவோவுக்கு சிறந்த இயக்குநருக்கான விருது வழங்கப்பட்டது. இது தவிர சிறந்த ஒளிப்பதிவுக்கான விருதையும் இந்த படம் தட்டிச்சென்றது. 'தி பாதர்' என்ற படத்தில் நடித்ததற்காக பழம்பெரும் நடிகர் ஆண்டனி ஹாப்கின்சுக்கு சிறந்த நடிகருக்கான விருது வழங்கப்பட்டது.

சிறந்த நடிகருக்கான பரிந்துரையில் இந்திய திரைப்படமான 'தி வைட் டைகர்' படத்தில் நடித்ததற்காக பொலிவூட் நடிகர் ஆதர்ஷ் கவ்ரவ் பெயரும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறந்த துணை நடிகைக்கான விருது மினாரி என்ற அமெரிக்க படத்தில் பாட்டியாக நடித்த தென் கொரியாவின் மூத்த நட்சத்திரமான யு – ஜங் யூனுக்கும், சிறந்த துணை நடிகருக்கான விருது 'யூடாஸ் அண்ட் தி பிளாக் மேசியா' என்ற படத்துக்காக டேனியல் கலுயாவுக்கும் வழங்கப்பட்டன.

# கொரோனா இப்போதைக்கு ஓயாது உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிப்பு 11/2 ஆண்டுக்கு மேல் நீடித்து வருகிறது. தற்போது பல்வேறு நாடுகளில் வைரஸ் வேகமாக பரவி வருகிறது.

இதனால் மீண்டும் கடும் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளன. அமெரிக்கா, இந்தியா, பிரேஸில், மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தினசரி பாதிப்பு அதிகரித்தபடியே இருக்கிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் சீனாவில் தோன்றிய கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவியது.

பின்னர் சுமார் 5 மாதங்களுக்கு பிறகு பாதிப்பு குறையத் தொடங்கியது. மேலும் தடுப்பு மருந்துகளும் பயன்பாட்டுக்கு வந்தன. இதனால் கொரோனா விரைவில் கட்டுக்குள் வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மீண்டும் வைரஸின் தாக்கம் வேகமெடுத்துள்ளது.

இந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்று இன்னும் அதிவேகமாக வளர்ந்து வருகிறது என்றும் அது முடிவுக்குவர நீண்ட காலம் ஆகலாம் என்றும் உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதாளோம் கூறியதாவது:-

கொரோனாப் பாதிப்பு அதிகரிப்பால் பல்வேறு நாடுகளில் ஆஸ்பத்திரியின் அவசர சிகிச்சை பிரிவுகள் நிரம்பி வழிகின்றன. பல நாடுகளில் தொற்று பாதிப்பு அதிகரித்தாலும் மக்களின் அலட்சியம் காரணமாக தொடர்ந்து பரவி வருகிறது. இளம் வயதினர் தங்களுக்கு தொற்று வராது என்று நம்புகின்றனர். ஆனால் அது தவறானது.

கொரோனாப் பரவல் குறித்து பல்வேறு குழப்பங்கள், சிகிச்சையில் உள்ள சிக்கல்களால் வைரஸ் முடிவுக்கு வர நீண்டகாலம் ஆகும். பொதுமக்களின் ஒத்துழைப்பு மூலம் தொற்றைக் கட்டுக்குள் கொண்டு வருவது சாத்தியம் என்பது நமக்கு தெரியவந்துள்ள உண்மை என்றார்.

உலக சுகாதார அமைப்பின் உயர் அதிகாரி மரியாவான் கெர்கோவ் கூறும்போது, தொடர்ந்து 7 வாரமாக வைரஸ் பரவல் அதிகரித்து வருகிறது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் உலகளவில் கொரோனாத் தொற்று 9 சதவீதம் அதிகரித்துள்ளது. அதே போல் இறப்பு எண்ணிக்கை ஒரே வாரத்தில் 5 சதவீதம் அதிகரித்து இருக்கிறது என்றார்.

# தாத்தாவின் இறுதி சடங்கில் பங்கேற்க இளவரசர் ஹாரி லண்டன் சென்றார்



இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவரும், இளவரசருமான பிலிப் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார். அவருக்கு வயது 99. அவரின் இறுதி சடங்குகள் வருகிற 17 ஆம் திகதி நடைபெறவுள்ளன. கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகள் காரணமாக மிகவும் நெருக்கமான குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே இளவரசரின் இறுதி சடங்கில் கலந்து கொள்வார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினர் என்ற பொறுப்பில் இருந்து விலகி தற்போது அமெரிக்காவில் வசித்து வரும் இளவரசர் ஹாரி தனது தாத்தாவின் இறுதிச் சடங்கில் பங்கேற்பாரா என்ற கேள்வி எழுந்தது.

எனினும் இளவரசர் ஹாரிக்கும், அரச குடும்பத்துக்கும் இடையிலான உறவு எவ்வளவு கடுமையானதாக இருந்தாலும் ஹாரி தனது தாத்தாவின் இறுதிச் சடங்கில் பங்கேற்பார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. பக்கிங்ஹாம் அரண்மனையும் இதனை உறுதி செய்தது.

அதன்படி தனது தாத்தாவின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக 36 வயதான இளவரசர் ஹாரி நேற்று முன்தினம் இரவு லண்டன் சென்றடைந்தார். அவர் லண்டனில் உள்ள கென்சிங்டன் அரண்மனையில் தங்க வைக்கப்பட்டுள்ளார். இளவரசர் ஹாரியின் மனைவியும், முன்னாள் அமெரிக்க நடிகையுமான மேகன் தற்போது கர்ப்பமாக இருப்பதால் அவர் தனது கணவருடன் லண்டன் செல்லவில்லை.

# அமெரிக்காவில் கறுப்பின வாலிபர் பொலிஸாரால் சுட்டுக்கொலை

அமெரிக்காவின் மினசோட்டா மாகாணம், மினியாபொலிஸ் நகரில் கடந்த ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி ஜோர்ஜ் பிளாய்ட் (வயது 46) என்ற கறுப்பினத்தைச் சேர்ந்தவரை பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் மடக்கிப்பிடித்தனர். அப்போது, டெர்ரக் சவுவின் (44) என்ற பொலிஸ் அதிகாரி, பிளாய்டை தரையில் தள்ளி அவரது கழுத்தில் காலை வைத்து பலமாக அழுத்தினார். இதில் மூச்சுத்திணறல் ஏற்பட்டு பிளாய்ட் பரிதாபமாக இறந்தார்.

இதனிடையே ஜோர்ஜ் பிளாய்டின் கழுத்தில் பொலிஸ் அதிகாரி கால் முட்டியை வைத்து அருந்தியமையால் அவர் மூச்சு விட முடியாமல் திணறி உயிரிழந்தது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வைரலானது.

இதனைத்தொடர்ந்து ஜோர்ஜ் பிளாய்ட்டின் சாவுக்கு நீதி கேட்டு அமெரிக்கா முழுவதும் மாபெரும் போராட்டம் வெடித்தது. இனவெறிக்கு எதிராகவும் பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனத்தை கண்டித்தும் நடந்த இந்தப் போராட்டங்கள் அமெரிக்காவையே உலுக்கியது. அமெரிக்கா மட்டுமன்றி உலகம் முழுவதும் ஜோர்ஜ் பிளாய்ட் கொலைக்கு நீதிகேட்டு போராட்டங்கள் நடைபெற்றன.

இதன் எதிரொலியாக பொலிஸ் அதிகாரி டெர்ரக் சவுவின் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு மீதான விசாரணை மினசோட்டாவின் ஹென்னெபின் நகரில் உள்ள மாவட்ட நீதிமன்றில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு தொடங்கியது. இந்த விசாரணை தற்போது இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளது.

இந்த விசாரணையையொட்டி மினசோட்டா மாகாணம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன இந்த நிலையில் மினசோட்டா மாகாணத்தில் கறுப்பின வாலிபர் ஒருவர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மினியாபொலிஸ் நகருக்கு அருகில் உள்ள புரூக்ளின் சென்டர் நகரில் போக்குவரத்து விதிமுறைகளை மீறியதாகக் கூறி கார் ஒன்றை தடுத்து நிறுத்திய பொலிஸார் காரை செலுத்தி வந்த கறுப்பினத்தைச் சேர்ந்த டான்ட் ரைட் (20) என்ற வாலிபரை கைது செய்ய முற்பட்டனர். ஆனால் டான்ட் ரைட் தான் எந்த தவறும் செய்ய வில்லை என பொலிஸிடம் கூறிவிட்டு மீண்டும் காரில் ஏறி அமர்ந்தார்.

அவர் காரை எடுத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட தயாரான சமயத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் அவரை துப்பாக்கியால் சுட்டார்.

துப்பாக்கிக் குண்டு காயத்துடன் டான்ட் ரைட் காரை சிறிது தூரம் செலுத்தி சென்றார். பின்னர் அந்த கார் மற்றொரு கார் மீது மோதி நின்றது. இதையடுத்து பொலிஸார் சென்று பார்த்தபோது டான்ட் ரைட் காருக்குள்




பிணமாக கிடந்தார். மேலும் அவருடன் காரில் பயணித்த பெண்ணொருவர் துப்பாக்கிக் குண்டு காயங்களுடன் துடித்துக்கொண்டிருந்தார். பொலிஸார் அவரை மீட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

இதனிடையே கறுப்பின வாலிபர் ஒருவர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் புரூக்ளின் மத்திய நகர் முழுவதும் காட்டுத்தீ போல பரவியது. இது அங்கு பெரும் போராட்டத்துக்கு வழி வகுத்தது. நூற்றுக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி டான்ட் ரைட் சாவுக்கு நீதி கேட்டு போராடத் தொடங்கினர்.

புரூக்ளின் மத்திய நகரில் உள்ள பொலிஸ் தலைமையகம் முன்பு திரண்ட போராட்டக்காரர்கள் டான்ட் ரைட் பெயரை முழக்கமிட்டதோடு, பொலிஸாருக்கு எதிராக கண்டன கோஷங்களையும் எழுப்பினர்.

இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. போராட்டக்காரர்கள் கலைந்து செல்லும்படி பொலிஸார் ஒலிபெருக்கிகள் மூலம் எச்சரித்தனர்.

ஆனால் அதற்கு செவி சாய்க்காத போராட்டக்காரர்கள் பொலிஸாரின் வாகனங்கள் மீது கற்களை வீசி எறிந்து தாக்கினர். இதனைத் தொடர்ந்து இரு தரப்புக்கும் இடையில் மோதல் வெடித்தது. பொலிஸார் போராட்டக்காரர்களை விரட்டியடிக்க கண்ணீர் புகை குண்டுகளை வீசியதோடு ரப்பர் குண்டுகளால் சுட்டனர்.

இந்த வன்முறை புரூக்ளின் மத்திய நகர் முழுவதும் பரவி ஆங்காங்கே பொலிஸாரும் போராட்டக்காரர்களும் கடுமையாக மோதிக்கொண்டனர். இதனால் அந்த நகரம் முழுவதும் போர்க்களமாக காட்சியளித்தது.

இதனை தொடர்ந்து நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர மினசோட்டா மாகாண ஆளுனர் டிம் வால்ஸ், புரூக்ளின் மத்திய நகரில் ஊரடங்கு உத்தரவை பிறப்பித்தார்.

மேலும் அந்த நகரில் தேசியப் பாதுகாப்பு படை வீரர்கள் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அணு ஆலை வெடி விபத்து

# இஸ்ரேலின் பயங்கரவாத சதி என்கிறது ஈரான் அரசாங்கம்

ஈரானின் இஸ்பகான் மாகாணத்திலுள்ள நாதன்ஸ் நகரில் புதிதாக கட்டப்பட்டுள்ள யுரேனியம் செறிவூட்டும் ஆலையில் நேற்று முன்தினம் பயங்கர வெடி விபத்து நேரிட்டது.



இந்த வெடி விபத்தால் ஆலையில் மின் விநியோகம் தடைப்பட்டது. அதே சமயம் இந்த விபத்தில் கதிரியக்கக் கசிவு ஏதும் ஏற்படவில்லை என்றும், ஊழியர்கள் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் ஈரான் அரசு கூறியது.

இந்த நிலையில் நாதன்ஸ் அணு உலையில் ஏற்பட்ட விபத்து பயங்கரவாத சதிச் செயல் என்றும், இஸ்ரேலே இதற்கு காரணம் என்றும் ஈரான் பரபரப்பு குற்றம் சாட்டியுள்ளது.

ஈரான் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் சாயீப் காதிப்சாதே இதுகுறித்து கூறுகையில், நாதன்ஸ் அணு உலை விபத்து, பயங்கரவாத சதிச்செயலின் விளைவு ஆகும். இது ஈரானிய மண்ணில் அணு பயங்கரவாதத்தின் செயல் ஆகும். சமீபத்திய இந்த தாக்குதலுக்கு சரியான நேரத்தில் இஸ்ரேலிய அரசை ஈரான் பழிவாங்கும். இஸ்ரேல் அதன் சொந்த பாதையின் மூலம் இதற்கான பதிலை பெறும் என கூறினார்.

இதுபற்றி ஈரான் வெளியுறவு மந்திரி முகமது ஜாவத் ஷாரீப் கூறுகையில், நாதன்ஸ் அணு ஆலை மேம்பட்ட இயந்திரங்களுடன் புனரமைக்கப்படும். பொருளாதார தடைகளை நீக்கும் பாதையில் ஈரான் வெற்றி பெறுவதை சகித்துக்கொள்ள முடியாத இஸ்ரேலியர்கள் ஈரானிய மக்களை பழிதீர்க்க விரும்புகிறார்கள். ஆனால் நாங்கள் அதற்கு அனுமதிக்க மாட்டோம். அதேவேளையில் ஈரானின் இந்த தாக்குதல் நடவடிக்கைக்கு நாங்கள் பழிவாங்குவோம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை பிரதேச செயலக பிரச்சினைக்கு விடுதலைப்புலிகளும் ஒரு காரணமாம்

## உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத்

கல்முனைபிரதேசசெயலகபிரச்சினைக்குவிடுதலைப் புலிகளும் ஒரு காரணமென உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அத்தோடு, முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் சஹ்ரானின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்துவிட்டு தற்போது, சமூகத்தின் மீது பழிபோடு வதை ஏற்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனையில் அமைந்துள்ள உலமா கட்சி அலுவலகத்தில் நேற்று இரவு இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், கல்முனை பிரதேச செயலகப் பிரச்சினைக்கு விடுதலைப்புலிகளும் ஒரு காரணமாகும்.

வடகிழக்கில் அவர்கள் கோலோச்சிய காலத்தில் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த பிரதேச செயலகத்தை இவ்வாறு பிரித்திருக்க மாட்டார்கள்.

ஆனால் புலிகள் முஸ்லிம் மக்களில் காழ்ப்புணர்ச்சி கொண்டு தமிழர் முஸ்லிம்களை நிரந்தரமாக பிரிப்பதற்காகவே இவ்வாறு செயற்பட்டார்கள்.

இதேபோன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் கல்முனை உப பிரதேச செயலக விடயத்தை ஒரு பொருட்டாக கருதாது அரசியல் செய்தமையும் இப்பிரச்சினை தொடர காரணமாகும்.

முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் காத்தான்குடி பகுதியில் குழப்பவாதியாக இருந்த சஹ்ரானுக்கு கை கொடுத்து தேர்தல் காலங்களில் ஒப்பந்தம் மேற்கொண்டிருந்ததை நாம் கண்டிருந்தோம்.

அவ்வாறு பிழைகளை செய்துவிட்டு கூலிக்கு செயற்பட்ட சஹ்ரான் குழு உருவாகுவதற்கு சமூகத்தில் உள்ளவர்கள்தான் காரணம் என்ற கருத்துக்களை அவர் பரப்புவதை ஏற்கமுடியாது.

இவரது பேச்சுக்களை பார்க்கின்றபோது அவருக்கு சரியான விளக்கங்கள் இருக்கின்றதா என்பது தெரியவில்லை.

வழமையாகவே ரவூப் ஹக்கீம் பேசுகின்றபோது என்ன பேசுகின்றார் என்பது யாருக்கும் புரியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# திருமலையில் நடக்கும் அநாகரிக குற்றங்கள்

திருகோணமலை, ரொட்டவெவ கிராமத்தில் இரவு நேரங்களில் வீடுகளுக்குள் கல்லெறிதல் மற்றும் பெண்கள் குளிப்பதை படம் மற்றும் வீடியோக்கள் எடுத்தல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன எனப் பொதுமக்கள் மத்தியில் அண்மைக் காலமாக பரபரப்பாக பேசப்பட்டு வந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு பெண்ணொருவர் தனது வீட்டுக் குளியலறையில் குளித்துக் கொண்டிருந்த போது, நால்வர் கொண்ட குழு, அலைபேசியில் வீடியோ எடுப்பதைக் கண்டு, அலறியுள்ளார்.

பெண்ணின் அலறல் சத்தம் கேட்டு ஒன்று கூடிய அயலவர்கள் அக் குழுவினரை துரத்திச் சென்றுள்ளனர்.

எனினும், அவர்கள் தப்பியோடியுள்ள போதும், அவர்களது செருப்புகள், பெண்ணின் வீட்டின் வளவுக்குள் வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

பெண்ணின் உறவினர்கள் மொரவெவ பொலிஸ் நிலையத்துக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், தப்பியோடியவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கையாக செருப்புகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் முறைப்பாடு செய்துள்ளார் எனவும் இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்ட நால்வரும் சிறுவர்கள் எனத் தாம் சந்தேகிப்பதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

# சிங்கள பயிற்சி நெறியின் திறன் வெளிப்படுத்தல் நிகழ்வு



அரச ஊழியர்களுக்கான 150 மணித்தியாலம் கொண்ட இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி நெறியின் திறன் வெளிப்படுத்தல் இறுதி நிகழ்வு நேற்று கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பாடநெறியின் தலைவர் எம்.என்.எம்.சசீர் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்வி அலுவலக கணக்காளர் வை.ஹபிபுல்லா விசேட அதிதிகளாக பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம் ரம்சான், தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலீஹ், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எஸ். ஜனூபா,சிங்கள பாட வளவாளர்களான ஆர்.சிரீஸ்கந்தராஜா,பி.சந்திர குமாரி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.




# புத்தாண்டை மக்கள் கொண்டாடுவதற்கு தயாராகி வரும் மட்டக்களப்பு மக்கள்

மட்டக்களப்பு, ஏப். 13

நாளை பிறக்கவிருக்கும் தமிழ் சிங்கள புத்தாண்டை மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடுவதற்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தயாராகி வருகின்றனர்.

மட்டக்களப்பு நகர், காத்தான்குடி, களுவாஞ்சிகுடி, ஏறாவூர்நகர், செங்கலடி, ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய கேந்திர நிலையங்களில் புத்தாண்டு கொண்டாட்டத்துக்குத் தேவையான உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் புத்தாடைகளை கொள்வனவு செய்வதில் மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டிவருவதை காணக் கூடியதாக உள்ளது.

பொதுச்சந்தைகளிலும் வர்த்தக நிலையங்களிலும் மக்கள் கூடுதலாக புத்தாண்டு பொருள் கொள்வனவில் ஈடு படுகின்றனர்.



இன்று காலை மட்டக்களப்பு நகரிலும் பொதுச் சந்தையிலும் வர்த்தக நிலையங்கள், ஆடை விற்பனை நிலையங்களிலும் மக்கள் நிறைந்து பொருள் கொள்வனவில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டுவருகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு





# ஐ.பி.எல். 2021 ராஜஸ்தானை வீழ்த்தியது பஞ்சாப் கிங்ஸ்

மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று இடம்பெற்ற ஐ.பி.எல். ரி - 20 தொடரின் நான்காவது லீக் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணி 4 ஓட்டங்களால் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை வென்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. கே.எல்.ராகுல் 91 ஓட்டங்களையும் தீபக் ஹூடா 64 ஓட்டங்களையும் எடுத்தனர். ராஜஸ்தான் அணியின் பந்துவீச்சில் சேத்தன் சக்கரியா 3 விக்கெட்டுக்களையும் கிறிஸ் மோறிஸ் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களைப் பெற, பஞ்சாப் கிங்ஸ் அணி 4 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. ராஜஸ்தான் அணியின் சஞ்சு சம்சன் 119 ஓட்டங்களையும் பட்லர் மற்றும் பராக் இருவரும் தலா 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பஞ்சாப் கிங்ஸ் அணியின் அர்ஸ்தீப் சிங் 3 விக்கெட்டுக்களையும் மொஹமட் ஷமி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக, தற்போதைய ஐ.பி.எல். தொடரின் முதலாவது சதத்தைப் பெற்றுக்கொண்ட சஞ்சு சம்சன் தெரிவானார்.

## ஐ.பி.எல். 2021 இன்றைய போட்டி கொல்கத்தா - மும்பை அணிகள் மோதல்!

தொடக்க லீக் ஆட்டத்தில் மண்ணைக் கவ்விய நடப்பு சம்பியன் மும்பை அணி, கடும் நெருக்கடியுடன் இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

ஐ.பி.எல். 2021 தொடரின் 5 ஆவது லீக் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் இன்று சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் அரங்கில் மோதுகின்றன. ஹைதராபாத் அணியை வீழ்த்திய உற்சாகத்துடன் இய்ன் மோர்கன் தலைமையிலான கொல்கத்தா அணி தனது 2ஆவது போட்டியில் களம் காணுகிறது.

கொல்கத்தா அணி தனது 2 ஆவது வெற்றிக்குக் குறிவைக்கும் நிலையில், நடப்பு சம்பியன் மும்பை நெருக்கடியுடன் களமிறங்குகிறது. ஐ.பி.எல். தொடரின் முதல் ஆட்டத்தில் தோற்கும் 8 ஆண்டு வரலாற்றை 9 ஆவது முறையாக இந்த ஆண்டும் தொடர்ந்திருக்கிறது மும்பை இந்தியன்ஸ் அணி.

கடந்த ஆண்டு யு.ஏ.இயில் நடந்த ஐ.பி.எல். தொடரில் தனது 2 ஆவது போட்டியில் கொல்கத்தவை 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி வீழ்த்தியது. கடந்த 5 ஆண்டுகளில் 3 முறை தொடரின் 2 ஆவது போட்டியில் கொல்கத்தாவுடன் மோதிய மும்பை, அந்த 3 போட்டியிலும் வென்றுள்ளது. இரு அணிகளும் இதுவரை 27 போட்டிகளில் ஒன்றையொன்று எதிர்கொண்டுள்ளன. இதில் மும்பை 21 - 6 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது. இரு அணிகளும் இறுதியாகச் சந்தித்த 5 போட்டிகளிலும் மும்பை 4 - 1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.



## பெண்கள் 20 ஓவர் சலஞ்ச் கிரிக்கெட் இந்த முறையும் 3 அணிகளே விளையாடும்!



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் 'பிளே - ஆஃப்' சுற்று ஆட்டத்தின் போது நடத்தப்படும் பெண்கள் 20 ஓவர் சலஞ்ச் கிரிக்கெட் போட்டியில் கடந்த ஆண்டு போல் இந்த முறையும் 3 அணிகளே கலந்து கொள்ளும் என்று இந்திய கிரிக்கெட் வாரிய வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த வருடம் 4 அணிகளைப் பங்குபெற வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் கொரோனாப் பரவல் காரணமாக அதனை சாத்தியமாக்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் போட்டிகள் டெல்லியில் நடைபெற வாய்ப்பு அதிகமிருப்பதாகவும், இதில் ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து வீராங்கனைகளைப் பங்குபற்ற வைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்துத் தொடர் டொட்டன்ஹாமை வீழ்த்தியது மன்செஸ்டர் யுனைட்டெட்

இங்கிலாந்து நாட்டில் நடைபெற்று வரும் பிரீமியர் லீக் கால்பந்துத் தொடரில் புள்ளிப் பட்டியலில் இரண்டாம் இடத்தில் இருக்கும் மன்செஸ்டர் யுனைட்டெட் அணியும் புள்ளிப் பட்டியலில் 7 ஆவது இடத்தில் இருக்கும் டோட்டன்ஹாம் அணியும் மோதின. இந்தப் போட்டியில் 3 -1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் அணி வெற்றிபெற்றுள்ளது.

முதல் பாதியில் டொட்டன்ஹாம் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 40 ஆவது நிமிடத்தில் சொன் ஹூங் கோல் அடித்து முதல் பாதியின் முடிவில் டொட்டன்ஹாம் அணியை 1 - 0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெறச் செய்தார்.



இரண்டாம் பாதியில் மன்செஸ்டர் யுனைட்டெட் அணி ஆட்டத்தில் வேகம் காட்டியது. அணியின் போக்பா, மக்டாமினே, பிசாக்கா என அனைவரும் தொடர்ந்து கோல் அடிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த முயன்றனர். ஆட்டத்தின் 57 ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட் அணி சார்பாக ஃபிரெட் கோல் அடித்து ஆட்டத்தை சமன் செய்தார்.

அதனைத் தொடர்ந்து 79 ஆவது நிமிடத்தில் கிரீன்வுட் கொடுத்த பந்தினை கவானி தலையால் முட்டி கோல் அடிக்க மன்செஸ்டர் யுனைட்டெட் 2 - 1 என்று முன்னிலை பெற்றது. ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட் அணிக்கு கிரீன்வுட் மூன்றாவது கோலை பதிவு செய்து அணியை 3 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெறச் செய்தார்.

இந்த வெற்றியின் மூலம் மன்செஸ்டர் யுனைட்டெட் அணி புள்ளிப் பட்டியலில் இரண்டாம் இடத்தில் நீடிக்கிறது. மறுமுனையில் டொட்டன்ஹாம் அணி ஏழாம் இடத்தில் தொடர்கிறது.

இவ்விரண்டு அணிகளும் மோதிய முதல் ஆட்டத்தில் டொட்டன்ஹாம் அணி 6 - 1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.பி.எல். தொடரில் 350 சிக்ஸர்கள் கிறிஸ் கெய்ல் புதிய சாதனை!

14 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் 4 ஆவது லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் நேற்று விளையாடின. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பஞ்சாப் கிங்ஸ் அணியின் அதிரடி ஆட்டக்காரரான கிறிஸ் கெய்ல் 28 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளோடு 40 ஓட்டங்களை எடுத்தார். இதன்போது அவரடித்த 2 சிக்ஸர்களோடு ஐ.பி.எல். தொடரில் முதலில் 350 சிக்ஸர்களை அடித்த வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுக்கொண்டார். இவர் இப்போது 351 சிக்ஸர்களை எடுத்துள்ளார்.

இந்த வரிசையில் ஏ.பி. டி.வில்லியர்ஸ் 237 சிக்ஸர்களுடன் 2 ஆவது இடத்தில் உள்ளார். சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனி 216 சிக்ஸர்களுடன் 3 ஆவது இடத்திலும் ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி இருவரும் முறையே 214 மற்றும் 201 சிக்ஸர்களுடன் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஈழம், முஸ்லிம் விவாகச் சட்டம் சொற்பதங்கள் சிங்கள மக்களை ஏமாற்றும் அரசின் உத்திகள்

## முன்னிலை சோசலிச கட்சி சுட்டிக்காட்டு

முஸ்லிம் விவாகச் சட்டம், ஈழம் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்திய தேசியவாதிகள் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்துக்கு எதிராக மௌனம் காப்பது வேடிக்கையானது.

ஈழம் என்ற சொற்பதத்தைப் பயன்படுத்தி அரசாங்கம் சிங்கள மக்களின் வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளது. தேசப்பற்று என்பது வெறும் தேர்தல் கால பிரசாரமாகவே காணப்படுகிறது என முன்னிலை சோசலிச கட்சியின் ஒருங்கிணைப்பாளர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

முன்னிலை சோசலியக் கட்சியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

சிங்கள மக்களின் மனங்களை வென்று அவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காவே ஈழம் என்ற சொற்பதத்தை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்கிறது. ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களின் போது தேர்தல் பிரசார மேடைகளில் ஈழம் என்ற சொல் பிரதான இடத்தை பிடித்திருந்தது.

கொழும்பு துறைமுக நகரப்பொருளாதார ஆணைக்குழு உருவாக்கத்துக்கான சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்குள் பிறிதொரு நாட்டை உருவாக்கும் நோக்கில் இந்தச் சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதியுடன் நாடாளுமன்றத்திலும் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான வர்த்தமானி மார்ச் மாதம் 24ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு நகரத்தை அமைக்கும் போது அனைவருக்கும் ஏற்படும் சந்தேகம் தான் எதற்காக கடலை நிரப்பி நகரமொன்று அமைக்கப்படுகின்றது. குறிப்பாக ஒரு நாட்டில் விசேட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கும் போது அரசாங்கத்துக்கு சொந்தமான பழைய இடங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பர்.

ஆனால் இலங்கையின் பூகோளத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் புதிய நகரமொன்றை அமைப்பதற்காக பாரியளவில் சுற்றாடல் அழிக்கப்பட்டது.

அன்றுசுற்றாடல்அழிவை காரணம் காட்டியே பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இன்று இந்த துறைமுக நகரம் தொடர்பான எதிர்காலச் செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்று மார்ச் 19ஆம் திகதி முன்வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைக்கு அனைவரும் இணக்கம் தெரிவித்தமையையடுத்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவிற்கு 7 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதில் முதலீடு, நிதி, தகவல் தொழில்நுட்பம், சட்டம், பொறியியல் தொழிநுட்பம், வர்த்தகம் அல்லது கணக்காய்வு உள்ளிட்ட விடயங்களில் நிபுணர்களே இந்த குழுவில் நியமிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டாலும் நியமிக்கப்பட்ட குழுவில் மத்திய வங்கி, நிதியமைச்சு உள்ளிட்ட நாட்டின் பிரதான நிறுவனங்கள் கூட இதில் உள்ளீர்க்கப்படவில்லை. மாறாக ஜனாதிபதிக்குத் தேவையானவர்களே ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் பொது சட்டம் செயற்படுத்தப்படாத பிரதேசமாகவே இது விளங்கவுள்ளது. 'ஒரே நாடு ஒரே சட்டம்' எனக் கூறி தேச வழமைச் சட்டம், முஸ்லிம் விவாகச் சட்டம் என்பவற்றை அடிப்படையாக வைத்து பாரிய ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

விவாகச் சட்டத்தில் வேறுபாடுகள் உள்ளதென கூச்சலிட்டவர்கள் இலங்கைளின் பொருளாதாரக் கொள்கையை மீறும் வகையில் நிலமொன்று பெயரிடப்பட்டுள்ளமை தொடர்பில் அவதான செலுத்தாமல் இருக்கின்றமை வேடிக்கையானது.

இலங்கை முதலீட்டு சபையின் விசேட ஏற்பாடுகள் சட்டமானவை. இந்த நகரத்தை நிதி நகரம் என்று கூறினாலும் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் நடவடிக்கையே இங்கு முன்னெடுக்கப்படவுள்ளது. அத்துடன் சூதாட்டம், கெசினோவும் மேம்படுத்தப்படவுள்ளது.

மேலும் தொழிலாளர்களின் உரிமைகளை ரத்துச் செய்யும் இடமாகவும் இந்த நகரத்தின் செயற்பாடுகளில் நிதியமைச்சு, மத்திய வங்கி, நாடாளுமன்றம் தலையிடுவதற்கான அதிகாரம் முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.-என்றார்.

# வெளிநாட்டுத் தூதரகப் பெயரைப் பாவித்த மோசடி கும்பலை தேடி கொழும்பில் வேட்டை

பிரதான வெளிநாட்டு தூதரகங்களில் இருந்து கதைப்பதைப் போன்று நடித்து, தொலைபேசி ஊடாக கொழும்பின் முன்னணி விற்பனை நிலையங்களில் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்து அதற்குப் பதிலாகப் போலியான காசோலைகளை வழங்கி மோசடி செய்யும் திட்டமிட்ட கும்பலொன்று தொடர்பில் சிறப்பு விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு, மோசடி தடுப்புப் பிரிவினர் இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்தது.

இந்த மோசடி கும்பல், பிரதான விற்பனை நிலையங்களுக்கு அழைப்பை எடுத்து தாம் வெளிநாட்டு தூதரகங்களில் இருந்து பேசுவதாகக் குறிப்பிட்டு, பொருள்கள் குறித்த விடயங்களை வின வி தமக்குத் தேவையான அளவைத் தருவித்துள்ளனர்.

பின்னர் விற்பனையாளர்கள், அந்தத் தொலைபேசி இலக்கத்துக்கு மீள அழைப்பை ஏற்படுத்தும் போதும், சாதாரணமாக வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றுக்கு அழைப்பை ஏற்படுத்தும் உணர்வைக் கொடுக்கும் வண்ணம், அதனை ஒத்த போலியான குரல் பதிவுகளை ஒலி பரப்பி அதன் பின்னர் குறித்த நபர் தொடர்புபடும் வகையில் தொலைபேசி கட்டமைப்பும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையிலேயே அண்மையில் கொழும்பின் இரு பிரதான தொலைபேசி விற்பனை நிலையங்களில் இருந்து இந்த மோசடிக் கும்பல் 47.29 லட்சம் ரூபா பெறுமதியான தொலைபேசிகளை இதே மோசடி பாணியில் பெற்றுக்கொண்டுள்ளது.

அந்த தொலைபேசிகளைப் பெற்று அதற்காக இரு காசோலைகளையும் வழங்கியுள்ளதுடன், அவை போலியாகத் தயாரிக்கப்பட்டவை என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந் நிலையிலேயே மோசடி தடுப்புப் பிரிவு சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இவ்வாறான பின்னணியில் மோசடிக் காரர்கள் மிக நுட்பமாக மக்களை ஏமாற்றும் நிலையில், பொருட் கொள்வனவு மற்றும் விற்பனையின் போது மிக அவதானமாக நடந்து கொள்ளுமாறு பொலிஸார் பொது மக்களைக் கேட்டுக் கொள்கின்றனர்.

அத்துடன் இவ்வாறான நூதன மோசடி நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட வேறு எவரேனும் இருப்பின் அவர்கள் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது இலக்கம் 182, எல்விட்டிகல மாவத்த, கொழும்பு 8 எனும் முகவரியில் உள்ள மோசடி தடுப்பு பணியகத்துக்கோ சென்று முறையிடுமாறும் பொலிஸார் கோரியுள்ளனர்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.04.2021இல் வெளியிடப்பெற்றது.